செ.வெ.எண்: 14/ 2019 நாள்:12.06.2020

# திருப்பூர் மாவட்டம்
# குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதி மொழி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக் கூட்டரங்கில் இன்று (12.06.2020) உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினத்தினை முன்னிட்டு குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தின உறுதி மொழி மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

உலக குழந்தை தொழிலாளர் முறை எதிர்ப்பு தினம் இன்று (12.06.2020) உலகம் முழுவதும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதனைத்தொடர்ந்து திருப்பூர் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், குழந்தை தொழிலாளர் முறை அகற்றுதல் தொடர்பான உறுதி மொழி ஏற்றுக்கொள்ளும் நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கு.சரவணமூர்த்தி, தொழிலாளர் உதவி ஆணையர் (அமலாக்கம்) திருமதி.மலர்க்கொடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சாகுல்அமீது, துணை ஆட்சியர்கள், தொழிலாளர் துறை அலுவலர்கள், அனைத்து அரசுத்துறைகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**